சுருக்கம்

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திண்டுக்கல் மாவட்டம் – வேடசந்தூர் வருவாய் வட்டத்தினைப் பிரித்து குஜிலியம்பாறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு

அரசாணை (நிலை) எண்.60 நாள்:18.02.2019,

விளம்பி வருடம், மாசி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்[வ.நி.1(1)]துறை, நாள் 9.6.2003.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க.பணி3(4)/43313/2017, நாள் 30.12.2018.

*********

ஆணை:

திண்டுக்கல் மாவட்டத்தில் 31.12.2017 அன்று நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பாக கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வருவாய் வட்டத்தைப் பிரித்து குஜிலியம்பாறையை தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்தூர் வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்த பின்னர் புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குஜிலியம்பாறை வருவாய் வட்டம், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோல்களின்படி, வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 30 என்பதற்கு பதிலாக 24 ஆகவும் மற்றும் 2 அல்லது 3 முழுமையான ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என்ற அளவுகோலுக்கு மாறாக வடமதுரை மற்றும் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் பகுதியளவு மட்டுமே உள்ளடக்கியதாக இருப்பதாலும், முன்மொழிவு நிராகரிக்கப்பட்ட நிலையில், உயர்மட்டக் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளுக்கு தளர்வு வழங்கி திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வருவாய் வட்டத்தினை இரண்டாகப் பிரித்து குஜிலியம்பாறையை தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்கும் கருத்துருவினை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி 24 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய 3 குறுவட்டங்களுடன் குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டம் உருவாக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

//த.பி.பா.//

3. மேலும், தற்போதைய வேடசந்தூர் வருவாய் வட்டம் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் குஜிலியம்பாறை வருவாய் வட்டம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகள் (இணைப்பு–IV) தொடர்பான அடிப்படை விவரங்களை தெரிவித்துள்ளதோடு புதிதாக உருவாக்கப்படவுள்ள குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு பொதுப்பிரிவு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், தேர்தல் பிரிவு மற்றும் வட்ட வழங்கல் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு 17 பணியிடங்கள் மற்றும் நிலஅளவைப் பிரிவிற்கு 6 பணியிடங்கள் என ஆக மொத்தம் 23 பணியிடங்கள் புதியதாக உருவாக்கிட வேண்டும் என்றும், வட்டபிரிவினைக்குப்பின் வேடசந்தூர் வருவாய் வட்டத்தில் மிகைப் பணியிடங்களாக உள்ள 3 பணியிடங்களை கலைத்திடவும் மற்றும் 6 புதிய பணியிடங்களை உருவாக்கிடவும், புதியதாக உருவாக்கப்படவுள்ள குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு ஓராண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ.1,97,13,624/–ம் தொடராச் செலவினமாக ரூ.28,49,446/–ம் ஒப்பளிப்பு செய்து வழங்கிடுமாறும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) திண்டுக்கல் மாவட்டத்தில், வேடசந்தூர் வருவாய் வட்டத்தினைப் பிரித்து குஜிலியம்பாறையைத் தலைமையிடமாகக் கொண்டு கோட்டாநத்தம், பாளையம், கோவிலூர் ஆகிய மூன்று குறுவட்டங்கள் மற்றும் 24 வருவாய் கிராமங்களுடன் குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) உருவாக்கப்படவுள்ள குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு மொத்தமுள்ள 93 பணியிடங்களில் 74 பணியிடங்களை மறுபரவலமர்த்தல் மூலமும், 15 பணியிடங்களை வருவாய்த் துறைக்கும், 4 பணியிடங்களை நில அளவைத்துறைக்கும் ஆக மொத்தம் 19 பணியிடங்களை (இணைப்பு 1a–இல் உள்ளபடி) புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் வேடசந்தூர் வருவாய் வட்டத்திற்கு 3 புதிய பணியிடங்கள் (இணைப்பு 1b–இல் உள்ளபடி) புதியதாக உருவாக்கப்படுகிறது.

(iii) உருவாக்கப்படவுள்ள குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.**1,43,22,108/–** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து நூற்றியெட்டு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ.**18,82,446/–** (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தாறு மட்டும்) [இணைப்பு–III–இல் உள்ளபடி] நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் வேடசந்தூர் வருவாய் வட்டத்திற்கு புதியதாக உருவாக்கப்படவுள்ள 3 பணியிடங்களுக்கான

..3..

பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தொடர்பாக ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ.**15,84,060/–** (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து அறுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iv) குரூப் கிராமங்களை பிரித்து புதியதாக குரூப் கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(v) இரவுக் காவலர், மசால்சி, புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14.5.2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vi) அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொ(ம)வே.வா.துறை, நாள் 11.03.2015–ஐயும் உடன் நிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள்/ சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

(vii) மறுபரவலமர்த்தல் மூலம் வேடசந்தூர் வருவாய் வட்டத்திலிருந்து குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் அப்பணியிடங்களுக்குரிய தளவாடங்களுடன் குஜிலியம்பாறை வருவாய் வட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(viii) இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும் என்பதால் புதுப்பணி தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(ix) ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(x) அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும். அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கக் கூடாது.

//த.பி.பா.//

(xi) அலுவகத்திற்கான வாடகை பொதுப்பணித்துறை பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பெற்று வழங்க வேண்டும்.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

## I பணியாளர் சம்பளங்கள்

சம்பளம் மற்றும் தகுதியுள்ள பிறபடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மறுபரவலமர்த்தப்பட்ட பணியிடங்களுக்கு கீழக்கண்ட கணக்குத் தலைப்பு / உப தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(i) வருவாய் பணியிடங்கள்
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) தேர்தல் பணியிடங்கள்
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –மாநிலச் செலவினங்கள் – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(iii) நில அளவைப் பணியிடங்கள்
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – மாநிலச் செலவினங்கள்–AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iv) குடிமைப் பொருள் பணியிடங்கள்
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

**II 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – AB வட்டப் பணியாளரமைப்புகள்**

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.31,500/–
தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை; கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(பொதுப்பணித்துறையின் இறுதி திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டது)
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

..5..

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,10,000/-
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.12,61,446/-
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/-
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,05,000/-
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–இன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் வட்டம் 18.02.2019–ஆம் நாள் முதல் செயல்படும்.

8. குஜிலியம்பாறை வருவாய் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.7422/நிதி(வருவாய்)/2019, நாள் 18.02.2019 மற்றும் அ.சா.கு.எண்.8086/மை.ம.ஆபி/2019, நாள் 18.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2763 (இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 079.
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய்
நிருவாக ஆணையர், சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில
நிருவாக ஆணையர், சென்னை–600 005.

//த.பி.பா.//

முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு
மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர்/ ஆணையர், நகர்ப்புற நிலஉச்சவரம்பு
(ம) நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–600 005.
ஆணையர், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு, சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல் மாவட்டம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–600 009.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–600 009.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–600 002.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–600 009.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–600 015.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090.

நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர்மேலாண்மை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை) அவர்களின்
தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதித் (வ.செ.பொது–I/ வ.செ.பொது–II/ வருவாய்/கக–3/
கூஉ(ம)நுபா/ பொதுப்பணி- I/மை.மஆபி) துறை, சென்னை–600 009.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/2/19
பிரிவு அலுவலர்
18/2/19

## இணைப்பு - I (a)

அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019
குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | பொதுப்பிரிவு | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| 3 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 4 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 5 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| 6 | மசால்சி (Masalchi) | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| ஆ | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 7 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 8 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| 9 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/- நிலை -8, ரூ.19,500/- ரூ.62,000/- | 1 |
| 10 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 11 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| 12 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| இ | தேர்தல் பிரிவு | | |
| 13 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| ஈ | வட்ட வழங்கல் பிரிவு | | |
| 14 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| 15 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| உ | நில அளவைப்பிரிவு | | |
| 16 | வட்ட துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/- நிலை-12, ரூ.35,600/- ரூ.1,12,800/- | 1 |
| 17 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 18 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 19 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| | மொத்தம் | | 19 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
18/2/19

## இணைப்பு - I (b)

**அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019 ஏற்கனவே செயல்பட்டு வரும் வேடசந்தூர் வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | சமூக பாதுகாப்புத்திட்டம் | | |
| 1 | இளநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 2 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 3 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/– நிலை–1, ரூ.15,700/– ரூ.50,000/– | 1 |
| | மொத்தம் | | 3 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

பிரிவு அலுவலர்.

18/2/19

## இணைப்பு- II

**அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**

புதிய குஜிலியம்பாறை வட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், வேடசந்தூர் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் மற்றும் புதிய வட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட வேண்டிய மற்றும் புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் ஆகியவற்றின் விவரம் பொதுவான பணியாளர் மாதிரி **(Generalized staff pattern)**யின்படி பின்வருமாறு தரப்படுகிறது.

| வ. எண் | பணியிடங்கள் | தற்காலிகம் / நிரந்தரம் | வேடசந்தூர் வட்டத்தின் தற்போதைய பணியிடங்கள் | வட்டப் பிரிவினைக்குப் பின்னர் வேடசந்தூர் வட்டத்தின் பணியிடங்கள் | | | உத்தேசிக்கப்பட்டுள்ள குஜிலியம்பாறை வட்டத்தின் பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள் | புதிதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மாறுதல் செய்யப்பட வேண்டியன | புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| அ. பொதுப்பிரிவு | | | | | | | | | |
| 1. | வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | 1 | - | - | - | 1 | - | 1 |
| 4 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 7 | 4 | - | - | 3 | - | 3 |
| | | த | 1 | - | 0 **(1a)** | - | - | - | - |
| 5 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நி | 7 | 4 | - | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 6 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | 3 | 2 | - | - | 1 | - | 1 |
| | | த | 1 | - | - | - | 1 | - | 1 |
| 7 | தட்டச்சர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | 1 | - | - | - | 1 | - | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 9 | ஈப்பு ஓட்டுநர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | நி | 9 | 6 | - | - | 3 | - | 3 |
| | | த | 2 | - | - | - | 2 | - | 2 |
| 11 | இரவுக் காவலர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |

//த.பி.பா.//

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | மசால்சி (Masalchi) | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| | **மொத்தம்** | | **40** | **24** | **0** | **0** | **15** | **6** | **21** |
| ஆ. சமூக பாதுகாப்புத் திட்டப் பிரிவு | | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | நி | - | - | - | - | - | 1 | 1 |
| | | த | 1 | 1 | - | - | - | - | - |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | - | - | - | - | - | 1 | 1 |
| | | த | 1 | 1 | - | - | - | - | - |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | - | - | - | 1 | **1b** (தே.பி.) | - | 1 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 4 | தட்டச்சர் | நி | - | - | - | 1 | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நி | - | - | - | 1 | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| | **மொத்தம்** | | **4** | **4** | **-** | **3** | **1** | **6** | **7** |
| இ. தேர்தல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | **1a** (பொது) | - | 1 |
| 3 | இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 1 | - | 0 **(1b)** | - | - | - | - |
| 4 | டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் (Data Entry Operator) | | 1 | - | 1(***) | - | - | - | - |
| | **மொத்தம்** | | **4** | **2** | **1** | **0** | **1** | **1** | **2** |
| ஈ) வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 1 | 1 | - | - | - | 1 | 1 |
| 2 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 1 | 1 | - | - | - | 1 | 1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நி | - | - | - | - | - | - | - |
| | | த | 2 | 1 | - | - | 1 | - | 1 |
| மொத்தம் | | | **4** | **3** | **0** | **0** | **1** | **2** | **3** |
| உ) கிராம நிருவாகம் | | | | | | | | | |
| 1 | கிராம நிருவாக அலுவலர் | நி | 48 | 25 | - | - | 23 | - | 23 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 2 | கிராம உதவியாளர் | நி | 63 | 33 | - | - | 30 | - | 30 |
| | | த | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | | நி | **111** | **58** | **0** | **0** | **53** | **0** | **53** |
| ஊ) நில அளவைப் பிரிவு | | | | | | | | | |
| 1. | வட்டத்துணை ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 3 | குறுவட்ட அளவர் | நி | 7 | 4 | - | - | 3 | - | 3 |
| | | த | - | - | - | - | - | - | - |
| 4 | முதுநிலை வரைவாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| 5 | நில ஆவண வரைவாளர் | நி | 1 | - | 1(***) | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | - | - |
| 6 | புல உதவியாளர் | நி | 1 | 1 | - | - | - | - | - |
| | | த | - | - | - | - | - | 1 | 1 |
| மொத்தம் | | | **12** | **8** | **1** | **0** | **3** | **4** | **7** |
| **ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)** | | | **175** | **99** | **2** | **3** | **74** | **19** | **93** |

**(1a)** பொதுப்பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாக கண்டறியப்பட்ட ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) பணியிடத்தை தேர்தல் பிரிவிற்கு மாற்றலாம்.

**(1b)** தேர்தல் பிரிவிலிருந்து மிகைப் பணியிடமாக கண்டறியப்பட்ட ஒரு இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடத்தை சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவிற்கு மாற்றலாம்.

(***) கலைக்கப்பட வேண்டிய மிகைப் பணியிடங்கள்

**வேடசந்தூர் வருவாய் வட்டத்தில் உள்ள மொத்தப் பணியிடங்கள் – 175**

| | | |
|---|---|---|
| நிறுத்தி வைக்கப்பட்டப் பணியிடங்கள் | – | 99 |
| மறுபரவலமர்த்தல் | – | 74 |
| மிகைப் பணியிடங்கள் | – | 2 |
| மொத்தப் பணியிடங்கள் | | 175 |

//த.பி.பா.//

<u>புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 22</u>

குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டம் – 19

ஏற்கனவே செயல்பட்டு வரும்
வேடசந்தூர் வருவாய் வட்டம் – 3

**<u>குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டத்தில் உள்ள மொத்த பணியிடங்கள் – 93</u>**

மறுபரவலமர்த்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள் – 74

புதியதாக உருவாக்கப்பட்ட பணியிடங்கள் – 19

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19
பிரிவு அலுவலர்.
18/2/19

# இணைப்பு - III

அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

அ. தொடரும் செலவினங்கள்

| வ. எண். | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (தோராயமாக ஆண்டொன்றுக்கு கணக்கீட்டுத்தாளில் உள்ளபடி) | 1,39,84,608 |
| 2. | அலுவலக கட்டிட வாடகை (பொதுப் பணித்துறையின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும்) | 0 |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) (2 வாகனங்களுக்கு) | 1,92,000 |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 |
| | **மொத்தம்** | **1,43,22,108** |

ஆ. தொடராச் செலவினங்கள்

| வ.எண். | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தளவாடங்கள் | 4,00,000 |
| 2. | ஈப்பு – 2 | 12,61,446 |
| 3. | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4. | கணினி | 75,000 |
| 5. | பிரிண்டர் (அச்சுப் பதிப்பு இயந்திரம்) | 30,000 |
| 6. | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 |
| 7. | பேக்ஸ் இயந்திரம் (தொலையச்சு இயந்திரம்) | 10,000 |
| 8. | குளிர்சாதனம் | 25,000 |
| 9. | தீயணைப்பான் | 10,000 |
| | **மொத்தம்** | **18,82,446** |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/19

பிரிவு அலுவலர்.

18/2/19

## இணைப்பு - IV

## அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## ஆட்சி எல்லை பட்டியல்

| வ. எண். | விவரங்கள் | வட்டம் | | | அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–இன் படியான அளவுகோல்கள் |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளபடி வேடசந்தூர் வட்டம் | உத்தேசிக்கப்பட்ட குஜிலியம்பாறை வட்டம் | எஞ்சிய வேடசந்தூர் வட்டம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தலைமையிடம் | வேடசந்தூர் | குஜிலியம்பாறை | வேடசந்தூர் | – |
| 2 | பரப்பளபு ச.கி.மீ | 946 ச.கி.மீ | 423.76 ச.கி.மீ | 522.22 ச.கி.மீ | (குறைந்த அளவு 250 ச.கி.மீ முதல் அதிகளவு 2000 ச.கி.மீ) |
| 3 | மக்கள் தொகை | 329100 | 118011 | 211089 | (குறைந்த அளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000 ச.கி.மீ) |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | பழனி | பழனி | பழனி | – |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | வேடசந்தூர் | வேடசந்தூர் | வேடசந்தூர் | – |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | கரூர் | கரூர் | கரூர் | – |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – | – |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | 1. வேடசந்தூர்<br>2.குஜிலியம்பாறை<br>3.வடமதுரை | குஜிலியம்பாறை (முழுவதும்)<br>வேடசந்தூர் – பகுதி | 1.வேடசந்தூர் (பகுதி)<br>2.வடமதுரை | – |
| 9 | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | 1. வேடசந்தூர்<br>2. எரியோடு<br>3. பாளையம்<br>4. வடமதுரை<br>5. அய்யலூர் | 1. பாளையம் | 1.வேடசந்தூர்<br>2. எரியோடு<br>3. வடமதுரை<br>4. அய்யலூர் | – |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 1.கோட்டாநத்தம்<br>2.பாளையம்<br>3.கோவிலூர்<br>4.எரியோடு<br>5.வடமதுரை<br>6. அய்யலூர்<br>7.வேடசந்தூர் | 1.கோட்டாநத்தம்<br>2.பாளையம்<br>3.கோவிலூர் | 1.வேடசந்தூர்<br>2.எரியோடு<br>3. வடமதுரை<br>4.அய்யலூர் | – |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 63 | 24 | 39 | புதிதாக உருவாக்கப்படவுள்ள வட்டத்தில் குறைந்த அளவு 30 கிராமங்கள் பூர்த்தி ஆகவில்லை. |
| 12 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 54 | 21 | 33 | – |
| 13 | தலைமை இடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் | லந்தக்கோட்டை – 60 கி.மீ | லந்தக்கோட்டை – 22 கி.மீ | பஞ்சந்தாங்கி – 40 கி.மீ | குறைந்தளவு 30 கி.மீ |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - V

**அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019**

### அறிவிக்கை – I

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள வேடசந்துார் வருவாய் வட்டத்தினைப் பிரித்து 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ஆம் நாளிலிருந்து குஜிலியம்பாறையைத் தலைமையிடமாகக் கொண்டு குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| குஜிலியம்பாறை | கோட்டாநத்தம் குறுவட்டம் (கிராமங்கள்–9) | 1 | 2 | ஆர்.வெள்ளோடு |
| | | 2 | 1 | திருக்கூர்ணம் |
| | | 3 | 6 | லந்தக்கோட்டை |
| | | 4 | 8 | கருங்கல் |
| | | 5 | 7 | தீண்டாக்கல் |
| | | 6 | 3 | ஆலம்பாடி |
| | | 7 | 4 | கோட்டாநத்தம் |
| | | 8 | 10 | தோளிப்பட்டி |
| | | 9 | 5 | டி.கூடலூர் |
| | பாளையம் குறுவட்டம் (கிராமங்கள்–8) | 10 | 9 | பாளையம் |
| | | 11 | 15 | கூம்பூர் |
| | | 12 | 14 | மல்லப்புரம் |
| | | 13 | 27 | வாணிக்கரை |
| | | 14 | 28 | ஆர்.புதுக்கோட்டை |
| | | 15 | 13 | உல்லியக்கோட்டை |
| | | 16 | 12 | சின்னலுப்பை |
| | | 17 | 11 | கரிக்காலி (கோட்டாநத்தம் குறுவட்டத்திலிருந்து) |
| | கோவிலூர் குறுவட்டம் (கிராமங்கள்–7 ) | 18 | 26 | குளத்துப் பட்டி |
| | | 19 | 25 | குடப்பம் |
| | | 20 | 33 | வெம்பூர் |
| | | 21 | 30 | நல்லூர் |
| | | 22 | 32 | நாகையகோட்டை (எரியோடு குறுவட்டத்திலிருந்து) |
| | | 23 | 29 | வடுகம்பாடி (பாளையம் குறுவட்டத்திலிருந்து) |
| | | 24 | 31 | ஆர்.கோம்பை (பாளையம் குறுவட்டத்திலிருந்து) |

குஜிலியம்பாறை புதிய வருவாய் வட்டத்தில் உள்ளடங்கும் கோட்டாநத்தம், பாளையம் மற்றும் கோவிலூர் ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது வேடசந்துார் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ஆம் நாளிலிருந்து குஜிலியம்பாறை வட்டாட்சியரால் கையாளப்படும்.

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

[illegible]

அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை–II

வேடசந்தூர் வருவாய் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு முன் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| வேடசந்தூர் | கோட்டாநத்தம் குறுவட்டம் (கிராமங்கள்–10) | 1 | 2 | ஆர்.வெள்ளோடு |
| | | 2 | 1 | திருக்கூர்ணம் |
| | | 3 | 6 | லந்தக்கோட்டை |
| | | 4 | 8 | கருங்கல் |
| | | 5 | 7 | தீண்டாக்கல் |
| | | 6 | 3 | ஆலம்பாடி |
| | | 7 | 4 | கோட்டாநத்தம் |
| | | 8 | 10 | தோளிப்பட்டி |
| | | 9 | 11 | கரிக்காலி |
| | | 10 | 5 | டி.கூடலூர் |
| | பாளையம் குறுவட்டம் (கிராமங்கள்–9) | 11 | 9 | பாளையம் |
| | | 12 | 31 | ஆர்.கோம்பை |
| | | 13 | 29 | வடுகம்பாடி |
| | | 14 | 15 | கூம்பூர் |
| | | 15 | 14 | மல்லப்புரம் |
| | | 16 | 27 | வாணிக்கரை |
| | | 17 | 28 | ஆர்.புதுக்கோட்டை |
| | | 18 | 13 | உல்லியக்கோட்டை |
| | | 19 | 12 | சின்னலுப்பை |
| | கோவிலூர் குறுவட்டம் (கிராமங்கள்–10 ) | 20 | 16 | பாலப்பட்டி |
| | | 21 | 26 | குளத்துப் பட்டி |
| | | 22 | 25 | குடப்பம் |
| | | 23 | 33 | வெம்பூர் |
| | | 24 | 30 | நல்லூார் |
| | | 25 | 35 | வெல்லம்பட்டி |
| | | 26 | 34 | உசிலம்பட்டி |
| | | 27 | 24 | கூவக்காபட்டி |
| | | 28 | 21 | நத்தப்பட்டி |
| | | 29 | 36 | அம்மாபட்டி |
| | எரியோடு குறுவட்டம் (கிராமங்கள்– 7 ) | 30 | 37 | ஸ்ரீராமபுரம் |
| | | 31 | 38 | மல்வார்பட்டி |
| | | 32 | 42 | இ.சித்தூர் |
| | | 33 | 32 | நாகையகோட்டை |
| | | 34 | 30 | மாரம்பாடி |
| | | 35 | 41 | நல்லமனார்கோட்டை |
| | | 36 | 43 | எரியோடு |

//த.பி.பா.//

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| வேடசந்தூர் | வடமதுரை குறுவட்டம் (கிராமங்கள்– 11) | 37 | 53 | வடமதுரை |
| | | 38 | 48 | வேல்வார்கோட்டை |
| | | 39 | 55 | பிலாத்து |
| | | 40 | 41 | காணப்பாடி |
| | | 41 | 49 | இராமநாதபுரம் |
| | | 42 | 47 | பாடியூர் |
| | | 43 | 45 | தென்னம்பட்டி |
| | | 44 | 46 | பெரும்புள்ளி |
| | | 45 | 40 | குளத்தூர் |
| | | 46 | 50 | சிங்காரக்கோட்டை |
| | | 47 | 52 | வேலாயுதம்பாளையம் |
| | அய்யலூர் குறுவட்டம் (கிராமங்கள்– 10) | 48 | 61 | அய்யலூர் |
| | | 49 | 62 | அ.கோம்பை |
| | | 50 | 63 | பஞ்சந்தாங்கி |
| | | 51 | 58 | சித்துவார்பட்டி |
| | | 52 | 44 | பாகாநத்தம் |
| | | 53 | 60 | புத்தூர் |
| | | 54 | 54 | மோர்பட்டி |
| | | 55 | 59 | கொல்லபட்டி |
| | | 56 | 57 | சுக்காம்பட்டி |
| | | 57 | 56 | கொம்பேறிபட்டி |
| | வேடசந்தூர் குறுவட்டம் (கிராமங்கள்– 6) | 58 | 20 | வேடசந்தூர் |
| | | 59 | 19 | வி.புதுக்கோட்டை |
| | | 60 | 18 | குட்டம் |
| | | 61 | 22 | பூதிப்புரம் |
| | | 62 | 23 | கைத்தியன்கோட்டை |
| | | 63 | 17 | கல்வார்பட்டி |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண்.60, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 18.02.2019

## அறிவிக்கை–III

வேடசந்துார் வருவாய் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு பின் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வரிசை எண் | வருவாய் கிராமத்தின் எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| வேடசந்துார் | எரியோடு குறுவட்டம் (கிராமங்கள்– 9) | 1 | 37 | ஸ்ரீராமபுரம் |
| | | 2 | 38 | மல்வார்பட்டி |
| | | 3 | 42 | இ.சித்தூர் |
| | | 4 | 30 | மாரம்பாடி |
| | | 5 | 41 | நல்லமனார் கோட்டை |
| | | 6 | 43 | எரியோடு |
| | | 7 | 34 | உசிலம்பட்டி |
| | | 8 | 35 | வெல்லம்பட்டி |
| | | 9 | 36 | அம்மாபட்டி |
| | வடமதுரை குறுவட்டம் (கிராமங்கள்– 11) | 10 | 53 | வடமதுரை |
| | | 11 | 48 | வேல்வார் கோட்டை |
| | | 12 | 55 | பிலாத்து |
| | | 13 | 41 | காணப்பாடி |
| | | 14 | 49 | இராமநாதபுரம் |
| | | 15 | 47 | பாடியூர் |
| | | 16 | 45 | தென்னம்பட்டி |
| | | 17 | 46 | பெரும்புள்ளி |
| | | 18 | 40 | குளத்தூர் |
| | | 19 | 50 | சிங்காரக் கோட்டை |
| | | 20 | 52 | வேலாயுதம் பாளையம் |
| | அய்யலூர் குறுவட்டம் (கிராமங்கள்–10 ) | 21 | 61 | அய்யலூர் |
| | | 22 | 62 | அ.கோம்பை |
| | | 23 | 63 | பஞ்சந்தாங்கி |
| | | 24 | 58 | சித்துவார்பட்டி |
| | | 25 | 44 | பாகாநத்தம் |
| | | 26 | 60 | புத்தூர் |
| | | 27 | 54 | மோர்பட்டி |
| | | 28 | 59 | கொல்லபட்டி |
| | | 29 | 57 | சுக்காம்பட்டி |
| | | 30 | 58 | கொம்பேறிபட்டி |
| | வேடசந்துார் குறுவட்டம் (கிராமங்கள்–9 ) | 31 | 20 | வேடசந்துார் |
| | | 32 | 19 | வி.புதுக்கோட்டை |
| | | 33 | 18 | குட்டம் |
| | | 34 | 22 | பூதிப்புரம் |
| | | 35 | 23 | கைத்தியன்கோட்டை |
| | | 36 | 17 | கல்வார்பட்டி |
| | | 37 | 21 | நத்தப்பட்டி (கோவிலூர் குறுவட்டத்திலிருந்து ) |
| | | 38 | 16 | பாலப்பட்டி (கோவிலூர் குறுவட்டத்திலிருந்து) |
| | | 39 | 24 | கூவக்காபட்டி (கோவிலூர் குறுவட்டத்திலிருந்து) |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.